# The Baptist Tabernacle of Los Angeles


1329 South Hope Street, L.A. Civic Center

Mailing Address:
P. O. Box 15308
Los Angeles, CA 90015
Phone: (213) 744-9999
E-mail: rlhymersjr@sbcglobal.net
www.sermonsfortheworld.com
www.baptisttabernacle.com






Dr. R. L. Hymers, Jr.
Senior Pastor

Dr. Christopher L. Cagan
Associate Pastor


டிசம்பர், 2018

அன்புள்ள நண்பரே:

“எல்லா பயங்களுக்கும் எதிராக” என்பது எனது வாழ்க்கை கதை, அது இந்த ஆண்டு ஏப்ரலில் வெளியிடப்பட்டது. எனது புத்தகத்தை பாராட்டினவர்களில் டாக்டர் போப் ஜோன்ஸ் III, அவர்கள் நான் “பழைய ஏற்பாட்டு தீர்க்க தரிசிகளில் ஒருவரை” போல இருப்பதாக சொன்னார். டாக்டர் பில் மோன்ரோய் அவர்கள், இருமுறை தலைவராக BBFIல் இருந்தவர், சொன்னார், “ஹைமர்ஸ் அவர்கள் ஒரு நவீனகால தானியேல்”. மற்றும் டாக்டர் ஹெர்பட் ராவ்லிங்ஸ், BBFIன் முற்பிதாவான டாக்டர் ஜான் ராவ்லிங்ஸ் அவர்களுடைய மகனானவர், ராவ்லிங் பவுண்டேஷனின் நிருவனரானவர், என்னை இப்படியாகக் கூப்பிட்டார், “ஒரு அமெரிக்க ஒரிஜனல்! ஒரு தரிசனம் உள்ளவர்! அவருடைய வாழ்க்கை கிறிஸ்துவின் நிமித்தமாக… ஒரு வித்தியாசமான அன்பை வெளிப்படுத்துகிறது.” டான் பாய்ஸ் என்ற சுவிசேஷகர் சொன்னார், “‘எல்லா பயங்களுக்கும் எதிராக’ என்ற புத்தகத்தை பிரசங்கிகள் மட்டுமல்ல, ஒவ்வொருவரும் படிக்க வேண்டும். ஹைமர்ஸ் அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஒரு உதாரணமாக இருக்கிறார்கள்… இவருடைய கதை இந்த காலத்தின் தேவைக்கு ஏற்றபொறுத்தமானதாக உள்ளது – தைரியம், ஒப்படைப்பு, மற்றும் குணாதிசயம்.”

இந்தவிதமாக பிரபலமான கிறிஸ்தவர்கள் என்னைப்பற்றி சொல்லுவதை கேட்கும்பொழுது, இது எப்படி நடந்தது என்று நான் ஆச்சரியப்பட்டேன். “இப்படிப்பட்ட ஒரு நபராக நான் எப்படி மாறினேன்?” எனது ஊழியத்தின் இளமை காலத்தில், நான் ஒரு பிரசங்கி என்று அழைக்கப்படுவதற்கு முன்பாகவே, தேவன் எனது வாழ்க்கையின் வசனமாக இந்த வசனத்தை கொடுத்தார்,

> “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு” (பிலிப்பியர் 4:13).

ஏறக்குறைய 61 வருடங்களாக இந்த வாக்குத்தத்தம் உண்மை என்பதை நான் கண்டறிந்தேன். எனது வாழ்க்கை முழுவதிலும் நான் அநேக சவால்களை மற்றும் எதிர்ப்புகளை சந்தித்திருக்கிறேன். நான் எப்பொழுதும் இயேசு கிறிஸ்துவை முற்றிலுமாக சார்ந்திருக்கிறபடியினால் நான் ஒவ்வொரு போராட்டத்திலும் வெற்றிபெற்றேன்.

***எங்களது வலைதளத்தில் வார்த்தைக்கு வார்த்தை போதனைகள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன அவைகள் நாற்பது மொழிகளில் கிடைக்கின்றன அந்த வலைதளம் WWW.SERMONSFORTHEWORLD.COM.***

கிறிஸ்துவின் நிமித்தமாக நான் மகத்தான தடைகளை ஜெயித்தேன் மற்றும் உலகம் முழுவதிலும் உள்ள மில்லியன் கணக்கான மக்களுக்கு ஊக்கம் அளிப்பவராக மாறினேன். நான் இயேசு கிறிஸ்துவை முற்றிலுமாக சார்ந்திருந்தபடியினால் நான் ஒவ்வொரு போராட்டத்திலும் வெற்றிபெற்றேன்.

இவைகள் அந்த "பெரிய" போராட்டங்களின் உதாரணங்கள் ஆகும். எனது இறையியல் படிப்பின்போது வேதாகமத்தை தாழ்வாக போதிக்கும் பொய் போதனைக்கு எதிராக நான் நிற்க வேண்டியதாக இருந்தது, வேதாகமத்தின் தவறில்லாத தன்மைக்காக அந்த போராட்டம் இருந்தது. நான் கிறிஸ்துவை முற்றிலுமாக சார்ந்திருந்தபடியினால் நான் அந்த போராட்டத்தில் வெற்றிபெற்றேன். அதன்பிறகு ஒரு பயங்கரமான தேவதூஷண திரைபடத்துக்கு எதிராக அந்த போராட்டம் இருந்தது, "தி லாஸ்ட் டெம்டேஷன் ஆப் கிரைஸ்ட்," என்ற அந்த படத்தில் இயேசு மகதலேனா மரியாளோடு பாலுரவு கொள்ளுவதாக காட்டப்பட்டது. நான் கிறிஸ்துவை முற்றிலுமாக சார்ந்திருந்தபடியினால் நான் அந்த போராட்டத்தில் வெற்றிபெற்றேன். என்னை ஒரு ஆன்டி செமிட்டி என்று தொலைகாட்சி மற்றும் செய்திதாள்களில் கண்டனம்பண்ணி "போலியான" செய்திகளை வெளியிட்டார்கள். நான் கிறிஸ்துவை, மற்றும் அவரை மட்டுமே முற்றிலுமாக சார்ந்திருந்தபடியினால், நான் அந்த போராட்டத்தில் வெற்றிபெற்றேன், மற்றும் அந்த பழியிலிருந்து முற்றிலுமாக விடுவிக்கப்பட்டேன். அதன்பிறகு கருகலைப்புக்கு விரோதமாக நடந்த போரட்டம் இருந்தது. எனது உதவியாளரான, ரெவரண்ட் ஜான் சாமுவேல் கேஹன், சொன்னார், "இரண்டு கருகலைப்பு மையங்களை மூடும்வரையிலும் டாக்டர் ஹைமர்ஸ் அவர்கள் தமது சபையார் அனைவரையும் போராட்டத்தில் ஈடுபடுத்தினார். அந்த இரண்டு கருகலைப்பு மையங்களை என்றென்றுமாக மூடும்வரையிலும் அவர் போராட்டத்தை நிறுத்தவில்லை." நான் இயேசுவோடு நின்றேன், நாங்கள் கிறிஸ்துவை முற்றிலுமாக சார்ந்திருந்தபடியினால் நாங்கள் அந்த போராட்டத்தில் வெற்றிபெற்றோம். பிறகு எங்கள் சபை கட்டிடத்தை காப்பாற்ற அந்த போராட்டம் இருந்தது. ஒரு பொல்லாத பாவம் நிறைந்த மனிதன் எங்கள் சபை உறுப்பினர்கள் 320 பேரை வெளியே கொண்டு போனான் மற்றும் நாங்கள் சபை கட்டிடத்தை ஏறக்குறைய இழந்துவிட்டோம். இந்த போராட்டத்திலும் எங்களால் வெற்றிபெற முடிந்தது, ஏன் என்றால் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." நான் இந்தவிதமான போராட்டங்களில் இருக்கும்பொழுது, சரியான பக்கம் எது தவறான பக்கம் எது என்பதை கணக்கிடுவேன். அதன்பிறகு சரியான பக்கத்தின் சார்பாக நான் நிற்பேன், நான் எப்பொழுதும் வெற்றி பெறுவேன் ஏன் என்றால் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு."

இப்போழுது, மற்ற சபைகளிலிருந்து உறுப்பினர்களை திருடி தங்கள் சபைகளை கட்ட முயற்சி செய்யும் அநேக பிரசங்கிகள் உள்ள இந்த காலத்தில், நான் ஒருபோதும் அதை செய்ததில்லை ஏன் என்றால் உலகத்தில் இருந்து இழக்கப்பட்ட மக்களை என்னால் வெற்றிகொள்ள முடிந்தது. ஏன்? ஏன் என்றால் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு." அதனால்தான்! அதனால்தான் உலக முழுவதற்கும் சுவிசேஷத்தை எடுத்து செல்லும் யுத்தத்தில் வெற்றிகொள்ள எங்களால் முடிந்தது. இன்று எனது போதனைகளை 1.5 மில்லியன் மக்கள் 221 நாடுகளில் 40 மொழிகளை பேசுபவர்கள் வாசிக்கிறார்கள் – ஏன் என்றால் "என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு."

***எங்களது வலைதளத்தில் வார்த்தைக்கு வார்த்தை போதனைகள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன அவைகள் நாற்பது மொழிகளில் கிடைக்கின்றன அந்த வலைதளம் WWW.SERMONSFORTHEWORLD.COM.***

ரெவரண்ட் ஜான் கேஹன் சொன்னார், “மனிதனாகிய இயேசு கிறிஸ்து – என்னும் உறுதியான பாறையின்மேல் அஸ்திபாரம் போட்டு ஒருவருடைய வாழ்க்கையை கட்ட வேண்டும் என்று டாக்டர் ஹைமர்ஸ் அவர்கள் தமது நீண்டகால அனுபவத்தினால் அறிந்திருக்கிறார்கள்.”

எனது மகன் ராபர்ட் சொன்னார், “ஒரு சில மக்கள் மட்டுமே எனது அப்பாவை புரிந்துகொண்டார்கள், ஏன் என்றால் அவர் சாதாரண மனிதனைபோல சிந்திப்பதில்லை. அவர் தேவனோடு நடக்கிறார்.” நான் போராடின ஒவ்வொரு போராட்டத்திலும் நான் வெற்றி பெற்றேன் அதற்கு ஒரேஒரு காரணம் – “என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.” அதனால்தான் நமக்கு இந்த சபை இருக்கிறது. அதனால்தான், என்னுடைய பிரசங்கத்தினால் இரட்சிக்கப்பட்டவர்கள் எழுந்து நிற்க சொல்லும்போது, ஏறக்குறைய அனைவரும் எழுந்து நிற்பார்கள். இரண்டு மக்கள் மட்டுமே வேறு இடங்களில் இரட்சிக்கப்பட்டவர்கள்.

எனது உண்மையுள்ள பங்காளி மற்றும் நண்பர், டாக்டர் கிறிஸ்டோபர் எல். கேஹன், சொன்னார், “இயேசு கிறிஸ்து மக்களுக்கும் உதவி செய்ய முடியும் என்று காட்டும்படியாக, டாக்டர் ஹைமர்ஸ் அவர்கள் இடறினார், வெடித்தார் மற்றும் உடைந்தார் அளவிட முடியாத தடைகளை வெற்றி கொண்டார்.”

டாக்டர் எடி பூர்வான்டோ சொன்னார், “தேவன் மனிதனோடு இருக்கும்பொழுது, அவனை தோல்வியடைய செய்ய முடியாது.”

டாக்டர் ராபர்ட் எல். சும்னார் சொன்னார், “எல்லா சக்திகளும் ஒருவனுக்கு விரோதமாக இருக்கும்பொழுது, சத்தியத்துக்காக நிற்க விரும்பும் ஒரு மனிதனை நான் பாராட்டுவேன் மற்றும் மெச்சிக்கொள்ளுவேன். ராபர்ட் லிஸ்லி ஹைமர்ஸ், ஜுனியர் அவர்கள் அப்படிப்பட்ட ஒரு கிறிஸ்தவர்.”

டாக்டர் கென்ட் பில்போட் சொன்னார், “டாக்டர் ஹைமர்ஸ் அவர்கள் நம்மில் ஒருவரும் ஒருபோதும் கேட்டிராத மிகசிறந்த பிரசங்கியாக இருந்தவர், ஒரு சுத்தமான ‘பழங்கால வாலிபர்’. அவருடைய குறிக்கோள் எப்பொழுதும் கிறிஸ்துவின் செய்தியை [மேல்] சார்ந்ததாகவே இருக்கிறது”.

டாக்டர் நீல் வேவர் சொன்னார், “டாக்டர் ஹைமர்ஸ் ஒரு தைரியமான மனிதர், அவர் பலமாக உணர்த்த பட்டவராக இருந்தவர், மற்றும் அந்த உணர்த்துதலால் எல்லா எதிர்ப்புகளுக்கும் விரோதமாக போராட [சித்தமுள்ளவராக] இருப்பவர்.”

டாக்டர் பில் கோப்லி சொன்னார், “…நவீன உலகத்தின் மகிழ்வூட்டும் போராட்டத்தில், இந்த பெரிய பிரசங்க வீரரை பின்பற்றுங்கள், அவரைபோல விசுவாசத்தில் நல்ல போராட்டத்தை போராடுங்கள்.”

டாக்டர் கிறிஸ்டோபர் எல். கேஹன் சொன்னார், “டாக்டர் ஹைமர்ஸ், ஜுனியர் அவர்கள் சாதிக்க முடியாததை சாதித்த ஒரு மாமனிதர் – எல்லாவிதமான பயங்களுக்கும் விரோதமாக! நான் இதை அறிந்திருக்கிறேன், அவரோடு நாற்பது வருடங்களாக நெருக்கமாக பணிபுரிந்த காரணத்தால்.”

என்னுடைய சுய சரிதையான, “எல்லாவிதமான பயங்களுக்கும் விரோதமாக”, புத்தகத்தை நீங்கள் $10.00 மட்டும் கொடுத்து வாங்க முடியும். டாக்டர் சி. எல். கேஹன் த. பெ. 15308, லாஸ் ஏன்ஜல்ஸ், கலிபோர்னியா 90015 என்ற விலாசத்துக்கு எழுதுங்கள். “கிறிஸ்மஸ் கடிதம்” என்ற வார்த்தைகளை உங்கள் கடித உரையின்மேல் நிச்சயமாக எழுதுங்கள் $10.00 தள்ளுபடி கிடைக்கும். $10.00 மட்டும் அனுப்பி எனது வாழ்க்கை கதையை பெற்றுக்கொள்ளுங்கள்!

***எங்களது வலைதளத்தில் வார்த்தைக்கு வார்த்தை போதனைகள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன அவைகள் நாற்பது மொழிகளில் கிடைக்கின்றன அந்த வலைதளம்***

***WWW.SERMONSFORTHEWORLD.COM.***

கிறிஸ்மஸ் நேரத்தில் உங்களை ஆசீர்வதிக்கும்படி நான் தேவனிடத்தில் ஜெபம் செய்வேன். அதேபோல புதுவருடத்திலும் அவர் உங்களை ஆசீர்வதிப்பாராக! இயேசு கிறிஸ்து ஸ்தோத்திரிக்கபடுவாராக!



டாக்டர் ஹைமர்ஸ் தமது மனைவி இல்லினா உடன், அவருடைய மகன் ராபர்ட், ராபர்ட்டின் மனைவி ஜின், ராபர்ட்டின் இரண்டு பெண் குழந்தைகள் ஹன்னா மற்றும் சாராள்.

இப்படிக்கு இயேசுவின் நாமத்தில் உங்களுடைய,



ஆர். எல். ஹைமெர்ஸ், ஜூனியர்
D.Min., Th.D., Litt.D.
பிலிப்பியர் 4:13



டாக்டர் ஹைமர்ஸ் குடும்பத்துடன் திருமதி ஹைமர்ஸ் அவர்களின் அங்கிள் பிரான்ஸிஸ்கோ காஸ்டுரோ, கரோலினா, பிரியானா, குவாட்டாமாலாவிலிருந்து சந்தித்த, எட்வின் குயிலார் மற்றும் ஆன்டிஒன்.



டாக்டர் மற்றும் திருமதி ஹைமர்ஸ் அவர்களுடன் டாக்டர் எல்மர் எல். டவுன்ஸ், எங்களது தொழிலாளர்தின வார இறுதி வேதாகம கான்பிரன்ஸில் கற்பித்த சந்திப்பிலிருந்து.

***எங்களது வலைதளத்தில் வார்த்தைக்கு வார்த்தை போதனைகள் நூற்றுக்கணக்காக இருக்கின்றன அவைகள் நாற்பது மொழிகளில் கிடைக்கின்றன அந்த வலைதளம் WWW.SERMONSFORTHEWORLD.COM.***